**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காட்பாடி**
**முன்னிலை – திரு. S.K.P. திலிப்பாபு, M.A., M.L.,**

**நீதிமன்ற நடுவர், காட்பாடி**

**2026–ம் ஆண்டு ஜூன் 02 ம் நாள் வியாழக்கிழமை**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.31/2024**
**CNR No. TNVL 24– 001806–2024**

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
காட்பாடி காவல் நிலையம்,
குற்ற எண்.752/2019,
U/s. 279, 304 A IPC

……குற்றமுறையிடுபவர்

//எதிராக//

முருகையா த/பெ. சண்முகய்யா
நெ.4/79 A இந்திராகாலனி, நகரம்
திருநெல்வேலி

……..குற்றஞ்சாட்டப்பட்ட நபர்

| Sl. No. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | எதிரியின் விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பெயர் | தந்தையின்/ கணவர் பெயர் | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | காட்பாடி காவல் நிலையம், குற்ற எண்.752/2019, U/s. 279, 304 A IPC | முருகைய்யா | சண்முகய்யா | -- | நெ.4/79 A இந்திராகாலனி, நகரம் திருநெல்வேலி | 44 |

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

| Date of | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்வு நாள் | புகார் கொடுத்த நாள் | எதிரியை கைது செய்த நாள் | எதிரியை பிணையில் விடுவித்த நாள் | சிறைக்கு அனுப்பிவைத்த நாள் | வழக்கு விசாரணை ஆரம்ப நாள் | வழக்கு விசாரணை முடிந்த நாள் | தண்டனை உத்தரவு | குற்றவாளிகள் மீதான தீர்ப்புரைக்குரிய தீர்வு முடிவின் நகலை ஒப்படைத்தல் | காலத்தாழ்விற்குரிய காரணம் |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18.12.2019 | 18.12.2019 | -- | -- | -- | 27.08.2024 | 19.06.26 | 02.07.26 | -- | No Delay |

இவ்வழக்கு கடந்த 09.05.2024 ம் தேதி அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றம் தொடுப்பவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.சசிகுமார் என்பவர் முன்னிலையிலும் தரப்பினர்களைக் கேட்ட பின்னர் ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இன்று இம்மன்றம் வழங்கும்

1. கடந்த 18.12.2019 –ம் தேதி இரவு 19.30 மணிக்கு சித்தூர் to காட்பாடி ரோடு, காட்பாடி செங்குட்டை, அனீஷ் ஓட்டல் எதிரில் புகார்தாரர் சசிகலா என்பவரின் அப்பா சுப்பிரமணி வயது/69, த/பெ கோவிந்தசாமி சைக்களை ஓட்டிக்கொண்டு வந்து சித்தூர் to காட்பாடி ரோடு, காட்பாடி செங்குட்டை, அனீஷ் ஓட்டல் எதிரில் ரோட்டை கடக்கும் போது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி காட்பாடி மார்கமாக வந்த TN–01–AN–0922 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை ஓட்டி வந்த இதன் ஓட்டுநர் குற்ற அறிக்கையில் காணும் எதிரியானவர் அதிகவேமாகவும் அஜாக்கிரதையாகவும் மேற்படி பஸ்ஸை ஒட்டி சைக்கிளில் ரோட்டை கடந்த சுப்பிரமணி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதால் பிரிவு 279 இதச படியும் அதே சம்பவத்தில் சுப்பிரமணி பின்பக்க தலை மற்றும் உள்காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியதால் பிரிவு 304(A) இதச படியும் குற்றம். எனவே எதிரி பிரிவு 279, 304(A) இதச பிரிவுகளின் படி குற்றம் புரிந்துள்ளார் என குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கி அவைகளை பரிசீலனை செய்து பார்க்க தகுந்த சந்தர்ப்பமும் வாய்ப்பும் அளித்து எதிரி மீதான

குற்றங்கள் பற்றி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்தார். மேலும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் வழக்கிற்கான முகாந்திரம் உள்ளதால் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரி தான் குற்றவாளி இல்லை என்று கூறினார்.

3. எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபணம் செய்யும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டன.

**4.அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்**

அ.சா.1 சசிகலா இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது கிளித்தான்பட்டறையில் வசித்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சுப்பிரமணி என்பவர் தனது தந்தை. 18.12.2019 7.15 மணிக்கு தான் செங்குட்டையில் இருந்த போது தங்கள் கிராமத்தை சேர்ந்த டெய்லர் சுப்பிரமணி என்பவர் தனது அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டுள்ளதாக நேரடியாக வந்து தகவல் சொன்னார். உடனே தானும் தனது அம்மா ராணி, தனது அக்கா

பரமேஸ்வரி ஆகியோர் செங்குட்டை சத்திரம்தெரு அனுஸ் ஹோட்டல் அருகே சென்று பார்த்த போது தனது தந்தை தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார். பின்னர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்து போலிசார் தந்தை உடலை மீட்டு ஆம்புலன்ஸ் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவ இடத்தில் அரசு பேருந்து தனியாக நிறுத்தி வைத்திருந்தார்கள். சம்பவம்தொடர்பாக தான் புகார் மனு கொடுத்தேன். தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தன்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 ராணி இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது கிளித்தான்பட்டறையில் வசித்து வருகிறேன். பணி ஏதும் செய்யவில்லை. அ.சா. 1 யை தெரியும். விபத்தில் இறந்து போன சுப்பரமணி என்பவர் தெரியும் அவர் தனது கணவர். தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2019 வருடம் தனது கணவர் சைக்கிளில் அவரது தங்கை வீட்டிற்கு சென்று வருவதாக மதியம் 2 மணியளவில் கூறிவிட்டு சென்றார். தனது கணவர் திரும்ப வீட்டிற்கு வரும் போது அனுஸ் ஹோட்டல் சத்திரம் பள்ளி அருகே பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக டெய்லர் சுப்ரமணி என்பவர் தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு தானும் தனது இரு மகளும் சென்று பார்த்ததோம். தனது கணவர் தலையில் பலத்த

காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார் பின்னார் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்து போலிசார் தனது கணவரின் உடலை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவ இடத்தில் அரசு பேருந்து நின்று கொண்டிருந்ததது. போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3 பரமேஸ்வரி இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது கிளித்தான்பட்டறையில் வசித்து வருகிறேன். பணி ஏதும் செய்யவில்லை. அ.சா.1 யை தெரியும் தனது தங்கை. அ.சா.2 யை தெரியும் அவர் தனது அம்மா. விபத்தில் இறந்து போன சுப்பரமணி என்பவர் தெரியும் அவர் தனது அப்பா. 18.12.2019 தேதி இரவு 7 மணியளவில் தான் தனது தங்கை சசிகலா என்வரின் செங்குட்டை கிராமம் வீட்டில் இருந்த போது டெய்லர் சுப்ரமணி என்பவர் தனது தந்தைக்கு விபத்து ஏற்பட்டு தலையில் அடிப்பட்டதாக தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு நானும் தனது அம்மா, தனது தங்கையும் சென்று பார்த்ததோம். தனது அப்பா தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார் பின்னர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்து போலிசார் தனது தந்தையின் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவம் தொடர்பாக தனது தங்கை சசிகலா புகார் மனு கொடுத்தார். பின்னர் விபத்து ஏற்படுத்தியவர் தென்காசியை சேர்ந்த முருகையா

என்பதைக் கேட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.4 செந்தில்குமார் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன். லாரி மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2, 3 யை தெரியும் அவர்கள் தனது உறவினர்கள். விபத்தில் இறந்து போன சுப்பரமணி என்பவர் தெரியும் அவர் தனது மாமானார். 18.12.2019 தேதி நான் சென்னையில் இருந்த போது தன்னுடைய மச்சினிச்சி சசிகலா என்பவர் தனது மாமானாருக்கு விபத்கு ஏற்பட்டு இறந்து விட்டதாக தகவல் சொன்னார். நான் அன்றைய தினமே வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனை சென்று பார்த்த போது தனது மாமானார் இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். மறுநாள் மாமானாரின் உடலை பிரேத பரிசோதனை செய்து போலிசார் சாட்சியமாக விசாரித்தார்கள். பின்னர் அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.5 சசிகுமார் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது கிளித்தான் பட்டறையில் வசித்து வருகிறேன். வெல்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ,2 ,3, 4 யை தெரியும் அவர்கள் தனது உறவினர்கள். விபத்தில் இறந்து போன சுப்பரமணி என்பவர் தெரியும் அவர் தனது மாமானார். 18.12.2019 தேதி தான் செங்குட்டையில் வெல்டராக பணியில்

இருந்த போது டெய்லர் சுப்ரமணி என்பவர் தனது மாமானாருக்கு விபத்து ஏற்பட்டு இறந்து விட்டதாக தகவல் சொன்னார். தான் சென்று பார்த்த போது மாமானருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார் சம்பவ இடத்தில் அரசு பேருந்து நின்று கொண்டிருந்தது. மாமனார் உடலை மீட்டு ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மறுநாள் மாமானாரின் உடலை பிரேத பரிசோதனை செய்து போலிசார் சாட்சியமாக தன்னை விசாரித்தார்கள் விபத்தை ஏற்படுத்தியவர் தென்காசியை சேர்ந்த முருகையா என்பதை தெரிந்து கொண்டேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.6 தட்சிணாமூர்த்தி இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது விழதாங்கலில் வசித்து வருகிறேன். தமிழ்நாடு காவல் துறையில் வேலை செய்து வருகிறேன். அ.சா. 1, 2, 3 , 4, 5 யை தெரியும் அவர்கள் தனது உறவினர்கள். விபத்தில் இறந்து போன சுப்பரமணி என்பவர் தெரியும் அவர் தனது மாமானார். 18.12.2019 தேதி தான் பனமடங்கியில் இருந்த போது தன்னுடைய மச்சினிச்சி சசிகலா என்பவர் தனக்கு போன் மூலமாக எனது மாமனாருக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். தான் சம்பவ இடம் சென்று பார்த்த போது தனது மாமனாரை ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். நான் அன்றைய தினமே சென்ற பார்த்த போது

எனது மாமனாரின் உடலை பார்க்கமுடியவில்லை. பின்னர் மறுநாள் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனையில் சவக்கிடங்கில் பார்த்தேன். தலையில் அடிப்பட்டு இருந்தது. பின்னர் விபத்து ஏற்படுத்தியது அரசு பேருந்து என்றும் விபத்தை ஏற்படுத்திய நபர் தென்காசியை சேர்ந்த முருகையா என்பதையும் தெரிந்து கொண்டேன். பின்னர் தனது மாமானாரின் உடலை பிரேத பரிசோதனை செய்து போலிசார் தன்னை சாட்சியமாக தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.7 ராஜ்குமார் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது திருநெல்வேலி மாவட்டம் செய்துங்கநல்லூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். திருநெல்வேலி 2 போக்குவரத்தது பணி மணையில் கட்டுபாட்டளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 17.02.2019 ம் தேதி நான் திருநெல்வேலி பணிமணையில் பணியில் இருக்கும் போது தடம் எண் 984 பதிவு எண் TN 01 AN 0922 திருநெல்வேலி to திருப்பதி செல்லும் பேருந்தின் ஓட்டுநராக முருகையா என்பவரையும் நடத்துனராக தியாகராஜன் என்பவரையும் நியமித்து பணி ஒதுக்கீடு செய்தேன். 18.02.2019 ம் தேதி இரவு 7.30 மணியளவில் நடத்துனர் தியாகராஜன் என்பவர் தனக்கு போன் மூலமாக காட்பாடி பக்கத்தில் விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம்

அளித்துள்ளார்.

அ.சா.8 தியாகராஜன் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது தற்போது திருநெல்வேலி மாவட்டம் வெண்கலபொட்டலூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். திருநெல்வேலி 2 போக்குவரத்தது பணி மணையில் நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரியை தெரியும். தன்னுடன் ஓட்டுநராக பணி செய்பவர். கடந்த 17.12.2019 ம் தேதி தான் திருநெல்வேலிருந்து தடம் எண் 984 பதிவு எண் TN 01 AN 0922 திருநெல்வேலி to திருப்பதி செல்லும் பேருந்தின் ஓட்டுநராக ஆஜர் எதிரி முருகையா என்பவரும் நடத்துனராக நானும் என்பவரையும் நியமிக்கபட்டு இருந்தோம். பின்னர் திருப்பதி சென்றுவிட்டு அங்கு 4.30 மணிக்கு கிளம்பி திருநெல்வேலி நோக்கி சென்று கொண்டு இருக்கும் போது காட்பாடி செங்குட்டை அருகே செல்லும் போது ஓட்டுநர் தீடீரென்று பிரேக் போட்டார். இறங்கி பார்த்த போது சைக்கிள் வந்த முதியவர் நாங்கள் வந்த பேருந்தின் முன்பாக விழுந்து கிடந்தார். அவர் மயக்க நிலையில் இருந்தார். தானும் ஆஜர் எதிரி சென்று பார்த்தோம். அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு மருத்துவமனை அனுப்பி வைத்தார்கள். தானும் ஓட்டுநரும் காவல்நிலையம் சென்றோம். வழக்கு சம்மந்தமாக உயர் அலுவலருக்கு தகவல் தெரிவித்தேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள். என்றும்,  என்றும், சாட்சியம்

அளித்துள்ளார்.

அ.சா.9 சதீஷ்குமார் இந்நீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில், தான் தற்போது அலமேலுமங்காபுரத்தில் வசித்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சுப்பிரமணி என்பவரை தெரியும். தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தன்னுடன் விஜயகுமார் என்பவரும் கையொப்பம் செய்தார். 19.12.2019 ம் வருடம் செங்குட்டை என்ற இடத்தில் காலை 07.00 மணிக்கு செய்து கொடுத்தேன். சுப்பிரமணி என்பவர் விபத்து வழக்கில் இறந்து தொடர்பான வழக்கில் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.10 விஜயகுமார் இநநீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில் தான் தற்போது கிளித்தான் பட்டைறையில் வசித்து வருகிறேன். 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். டைலர் கடை வைத்து நடத்தி வருகிறேன். விபத்தில் இறந்து போன சுப்பிரமணி என்பவரை தெரியும். தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தன்னுடன் சதீஷ்குமார் என்பவரும் கையொப்பம் செய்தார். 19.12.2019 ம் வருடம் செங்குட்டை என்ற இடத்தில் காலை 07.00 மணிக்கு செய்து

கொடுத்தேன். சுப்பிரமணி என்பவர் விபத்து வழக்கில் இறந்து தொடர்பான வழக்கில் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.11 சந்தோஷ் இநநீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில் தான் தற்போது காட்பாடி காந்திநகரில் வசித்து வருகிறேன். தற்போது மேல்பாடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.12.2019 ம் வருடம் காட்பாடி காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது விபத்தில் இறந்து போன சுப்பிரமணி என்பவரின் உடலை உடற்கூராய்வு செய்ய காவல் ஆய்வாளர் வழங்கிய வேண்டுடகோள் கடிதத்தை வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை மருத்துவரிடம் வழங்கினேன். பின்னர் பிரேத விசாரணை முடித்து உடலை உறவினர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளரிடம் அறிக்கை சமர்ப்பித்தேன் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.12 மனோகரன் இநநீதிமன்றத்தில் தோன்றி அளித்த சாட்சியத்தில் தான் தற்போது 30.04.2023 திருவலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றேன். தற்போது காட்பாடி கல்புதூரில் வசித்து வருகிறேன். கடந்த 18.12.2018 ம் தேதி இரவு 21.30 மணிக்கு காட்பாடி காவல்

நிலைய உதவி ஆய்வளராக பணியில் இருந்தபோது சசிகலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைபடி நிலைய குற்ற எண்.752/2019 சட்டப்பிரிவுகள் 279, 304(எ) இதச பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையும், புகார் மனுவையும் இணைத்து கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். பின்னர் ஒரு நகலை தன்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சதீஷ்குமார், விஜயகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவம் இடம் மற்றும் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். அது முறையே அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் விபத்தில் இறந்து போன சுப்பிரமணி என்பவரின் உடலை வேலூர் அடுக்கம்பாறை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் சாட்சிகளான நந்தகுமார், ரவி, ஆறுமுகம், விஸ்வநாதன், கருணாகரன் ஆகியோர்களை விசாரித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் சசிகலா, ராணி, பரமேஸ்வரி' செந்தில்குமார், சசிகுமார், தட்சிணாமூர்த்தி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விபத்தில் இறந்த போன சுப்பிரமணி என்பவரின் பிரேதேத்தின் மீது உடற்கூராய்வு செய்ய

தலைமை காவலர் சந்தோஷ் என்பவர் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். பின்னர் 19.12.2019 ம் தேதி இறந்து போன சுப்பிரமணியின் உடலை உடற்கூராய்வு செய்து உறவினர் வசம் ஒப்படைத்தேன். பின்னர் விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்து பதிவு எண் TN01 AN0922 பேருந்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினேன். பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் கருணாநிதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து ஆய்வறிக்கை பெற்றேன். அந்த விபத்து ஆய்வறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் எதிரி முருகய்யா என்பவர் 20.12.2019 ம் தேதி நிலையம் ஆஜரானவரை காலை 10.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவித்தேன். பின்னர் நடத்துனர் தியாகராஜன் மற்றும் மேலாளர் ராஜ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கு கோப்பை காவல் ஆய்வாளர் புகழ் என்பவரின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 11 வரை விசாரணை செய்ததில் தன்னிடம் கூறியதையே அவரிடமும் கூறியதால் தனியாக மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் இறந்துபோனவரின் உடலை உடற்கூராய்வு செய்த மருத்துவர் நாகேந்திர குமார் என்பவரை விசாரித்து உடற்கூராய்வு சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த உடற்கூறாய்வு சான்றிதழ் அ.சா.ஆ.9 ஆக

குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் சந்தோஷ், மனோகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் புலன் விசாரணை முடித்து 05.02.2020ம் தேதி எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதச பிரிவின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5. இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமானவற்றைத் தொகுத்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(பி)ன் படி வினவியபோது எதிரி அவைகளை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

## 6. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞரின் வாதம்

அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின்போது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம், அனீஷ் ஓட்டல் எதிரில் ரோட்டை கடக்கும் போது அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி காட்பாடி மார்கமாக வந்த TN–01–AN–0922 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை ஓட்டி வந்த இதன் ஓட்டுநர் குற்ற அறிக்கையில் காணும் எதிரியானவர் அதிகவேமாகவும் அஜாக்கிரதையாகவும் மேற்படி பஸ்ஸை ஓட்டி

சைக்கிளில் ரோட்டை கடந்த சுப்பிரமணி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதால் பிரிவு 279 இதச படியும் அதே சம்பவத்தில் சுப்பிரமணி பின்பக்க தலை மற்றும் உள்காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என முடிவு செய்து அதிகபட்ச சிறைதண்டனையும், அபராதமும் விதிக்குமாறு வாதம் செய்தார்.

## 7. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞரின் வாதம்

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி கண்ணுற்று சாட்சியை விசாரித்தபோதிலும் அவர் எதிரிதான் சம்பவத்தை ஏற்படுத்தினார் என்று எதிரியை அடையாளப்படுத்தவில்லை என்றும் நடந்த விபத்தில் TN-01-AN-0922 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை ஓட்டி வந்த இதன் ஓட்டுநர் குற்ற அறிக்கையில் காணும் எதிரியானவர் அதிகவேமாகவும் அஜாக்கிரதையாகவும் மேற்படி பஸ்ஸை ஒட்டி சுப்பிரமணி மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதால் சுப்பிரமணி பின்பக்க தலை மற்றும் உள்காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறப்பு ஏற்பட காரணமாக இருந்ததாக அரசு தரப்பில் திட்டவட்டமாக நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் இறந்து போனவரின் குடும்பத்திற்கு விபத்து நஷ்டஈடு பெறுவதற்காக எதிரியின் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும்

எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கிலிருந்து விடுவித்து உத்தரவிடவேண்டுமென வாதம் செய்தார்.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது யாதெனில், அரசு தரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றமானது அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதுவேயாகும்.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பை சார்ந்ததாகும். எதிரி அவரின் வாகனத்தை கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும, ஓட்டி வந்து ஜெயபிரகாஷ் என்பவர் மீது மோதி விபத்து ஏற்பட்டு மரணம் ஏற்பட்டுள்ளதா என்பது தான் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமாகும்.

10. அ.சா.1 இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் கேள்விபட்ட சாட்சி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த 18.12.2019 7.15 மணிக்கு தான் செங்குட்டையில் இருந்த போது தங்கள் கிராமத்தை சேர்ந்த டெய்லர் சுப்பிரமணி என்பவர் தனது அப்பாவிற்கு விபத்து

ஏற்பட்டுள்ளதாக நேரடியாக வந்து தகவல் சொன்னார். உடனே தானும் தனது அம்மா ராணி, தனது அக்கா பரமேஸ்வரி ஆகியோர் செங்குட்டை சத்திரம்தெரு அனுஸ் ஹோட்டல் அருகே சென்று பார்த்த போது தனது தந்தை தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார். பின்னர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்து போலிசார் தந்தை உடலை மீட்டு ஆம்புலன்ஸ் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவ இடத்தில் அரசு பேருந்து தனியாக நிறுத்தி வைத்திருந்தார்கள். சம்பவம்தொடர்பாக தான் புகார் மனு கொடுத்தேன். தன்னிடம் காட்டப்படும் புகார் மனு தன்னுடையது தான். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.2 அ.சா.3 அ.சா.4 அ.சா.5, அ.சா.6, அ.சா.7 கேள்விபட்ட சாட்சி ஆவார்கள். அவர் தனது சாட்சியத்தில்தேதி மாதம் ஞாபகம் இல்லை. 2019 வருடம் தனது கணவர் சைக்கிளில் அவரது தங்கை வீட்டிற்கு சென்று வருவதாக மதியம் 2 மணியளவில் கூறிவிட்டு சென்றார். தனது கணவர் திரும்ப வீட்டிற்கு வரும் போது அனுஸ் ஹோட்டல் சத்திரம் பள்ளி அருகே பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக டெய்லர் சுப்ரமணி என்பவர் தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு தானும் தனது இரு மகளும் சென்று பார்த்ததோம். தனது கணவர் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்த நிலையில்

காணப்பட்டார் பின்னார் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்து போலிசார் தனது கணவரின் உடலை மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவ இடத்தில் அரசு பேருந்து நின்று கொண்டிருந்ததது. போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 தனது சாட்சியத்தில் 18.12.2019 தேதி இரவு 7 மணியளவில் தான் தனது தங்கை சசிகலா என்வரின் செங்குட்டை கிராமம் வீட்டில் இருந்த போது டெய்லர் சுப்ரமணி என்பவர் தனது தந்தைக்கு விபத்து ஏற்பட்டு தலையில் அடிப்பட்டதாக தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு நானும் தனது அம்மா, தனது தங்கையும் சென்று பார்த்தோம். தனது அப்பா தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார் பின்னர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்து போலிசார் தனது தந்தையின் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவம் தொடர்பாக தனது தங்கை சசிகலா புகார் மனு கொடுத்தார். பின்னர் விபத்து ஏற்படுத்தியவர் தென்காசியை சேர்ந்த முருகையா என்பதைக் கேட்டு தெரிந்து கொண்டேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 தனது சாட்சியத்தில் 18.12.2019 தேதி நான் சென்னையில் இருந்த போது தன்னுடைய மச்சினிச்சி சசிகலா என்பவர் தனது மாமானாருக்கு விபத்கு ஏற்பட்டு இறந்து விட்டதாக தகவல் சொன்னார். நான்

அன்றைய தினமே வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனை சென்று பார்த்த போது தனது மாமானார் இறந்து விட்டதாக தகவல் சொன்னார்கள். மறுநாள் மாமானாரின் உடலை பிரேத பரிசோதனை செய்து போலிசார் சாட்சியமாக விசாரித்தார்கள். பின்னர் அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 தனது சாட்சியத்தில் 18.12.2019 தேதி தான் செங்குட்டையில் வெல்டராக பணியில் இருந்த போது டெய்லர் சுப்ரமணி என்பவர் தனது மாமானாருக்கு விபத்து ஏற்பட்டு இறந்து விட்டதாக தகவல் சொன்னார். தான் சென்று பார்த்த போது மாமானருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்த நிலையில் காணப்பட்டார் சம்பவ இடத்தில் அரசு பேருந்து நின்று கொண்டிருந்தது. மாமனார் உடலை மீட்டு ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மறுநாள் மாமானாரின் உடலை பிரேத பரிசோதனை செய்து போலிசார் சாட்சியமாக தன்னை விசாரித்தார்கள் விபத்தை ஏற்படுத்தியவர் தென்காசியை சேர்ந்த முருகையா என்பதை தெரிந்து கொண்டேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.6 தனது சாட்சியத்தில் 18.12.2019 தேதி தான் பனமடங்கியில் இருந்த போது தன்னுடைய மச்சினிச்சி சசிகலா என்பவர் தனக்கு போன் மூலமாக எனது மாமனாருக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். தான்

சம்பவ இடம் சென்று பார்த்த போது தனது மாமனாரை ஆம்புலன்ஸ் மூலமாக வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். நான் அன்றைய தினமே சென்ற பார்த்த போது எனது மாமனாரின் உடலை பார்க்கமுடியவில்லை. பின்னர் மறுநாள் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனையில் சவக்கிடங்கில் பார்த்தேன். தலையில் அடிப்பட்டு இருந்தது. பின்னர் விபத்து ஏற்படுத்தியது அரசு பேருந்து என்றும் விபத்தை ஏற்படுத்திய நபர் தென்காசியை சேர்ந்த முருகையா என்பதையும் தெரிந்து கொண்டேன். பின்னர் தனது மாமானாரின் உடலை பிரேத பரிசோதனை செய்து போலிசார் தன்னை சாட்சியமாக தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.7 தனது சாட்சியத்தில் கடந்த 17.02.2019 ம் தேதி நான் திருநெல்வேலி பணிமணையில் பணியில் இருக்கும் போது தடம் எண் 984 பதிவு எண் TN 01 AN 0922 திருநெல்வேலி to திருப்பதி செல்லும் பேருந்தின் ஓட்டுநராக முருகையா என்பவரையும் நடத்துனராக தியாகராஜன் என்பவரையும் நியமித்து பணி ஒதுக்கீடு செய்தேன். 18.02.2019 ம் தேதி இரவு 7.30 மணியளவில் நடத்துனர் தியாகராஜன் என்பவர் தனக்கு போன் மூலமாக காட்பாடி பக்கத்தில் விபத்து ஏற்பட்டதாக தகவல் விசாரித்தார்கள். சொன்னார். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.8 பேருந்தின் நடத்ததுனர் ஆவார். கடந்த 17.12.2019 ம் தேதி தான் திருநெல்வேலிருந்து தடம் எண் 984 பதிவு எண் TN

01 AN 0922 திருநெல்வேலி to திருப்பதி செல்லும் பேருந்தின் ஓட்டுநராக ஆஜர் எதிரி முருகையா என்பவரும் நடத்துனராக நானும் என்பவரையும் நியமிக்கபட்டு இருந்தோம். பின்னர் திருப்பதி சென்றுவிட்டு அங்கு 4.30 மணிக்கு கிளம்பி திருநெல்வேலி நோக்கி சென்று கொண்டு இருக்கும் போது காட்பாடி செங்குட்டை அருகே செல்லும் போது ஓட்டுநர் தீடீரென்று பிரேக் போட்டார். இறங்கி பார்த்த போது சைக்கிள் வந்த முதியவர் நாங்கள் வந்த பேருந்தின் முன்பாக விழுந்து கிடந்தார். அவர் மயக்க நிலையில் இருந்தார். தானும் ஆஜர் எதிரி சென்று பார்த்தோம். அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு மருத்துவமனை அனுப்பி வைத்தார்கள். தானும் ஓட்டுநரும் காவல்நிலையம் சென்றோம். வழக்கு சம்மந்தமாக உயர் அலுவலருக்கு தகவல் தெரிவித்தேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள். என்றும், என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

13. அ.சா.9 மற்றும் அ.சா.10 பார்வை மகஜர் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.9 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். தன்னுடன் சதீஷ்குமார் என்பவரும் கையொப்பம் செய்தார். 19.12.2019 ம் வருடம் செங்குட்டை என்ற இடத்தில் காலை 07.00 மணிக்கு செய்து கொடுத்தேன். சுப்பிரமணி என்பவர் விபத்து வழக்கில் இறந்து தொடர்பான வழக்கில் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும்

சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.10 தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் தன்னுடையது தான். தன்னுடன் சதீஷ்குமார் என்பவரும் கையொப்பம் செய்தார். 19.12.2019 ம் வருடம் செங்குட்டை என்ற இடத்தில் காலை 07.00 மணிக்கு செய்து கொடுத்தேன். சுப்பிரமணி என்பவர் விபத்து வழக்கில் இறந்து தொடர்பான வழக்கில் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.11 தலைமை காவலர் ஆவார். கடந்த 19.12.2019 ம் வருடம் காட்பாடி காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது விபத்தில் இறந்து போன சுப்பிரமணி என்பவரின் உடலை உடற்கூராய்வு செய்ய காவல் ஆய்வாளர் வழங்கிய வேண்டுடகோள் கடிதத்தை வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனை மருத்துவரிடம் வழங்கினேன். பின்னர் பிரேத விசாரணை முடித்து உடலை உறவினர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளரிடம் அறிக்கை சமர்ப்பித்தேன் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. அ.சா.12 இவ்வழக்கின் விசாரணை அதிகாரி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் புகார்தாரரின் புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த்ததைப் பற்றியும், சம்பவம் இடம் சென்று மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்ததை

பற்றியும், இறந்த நபர்களுக்கு பிரேத விசாரணை செய்ததை பற்றியும், மோட்டார் சான்று பெற்று அவரிடம் விசாரணை செய்ததை பற்றியும், பஞ்சாயத்தார் அறிக்கை தயார் செய்தது பற்றியும், இறந்த நபர்களுக்கு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சான்று பெற்றதை பற்றியும், பிரேத பரிசோதனை முடித்து உரியவரிடம் ஒப்படைத்தேன் என்றும், இறுதியாக இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை பற்றியும் தாக்கல் செய்துள்ளார். அவரது சாட்சியம் வழக்கு விசாரணைக்கு ஒத்தியதே ஆகும்.

16. இவ்வழக்கில் எதிரியை அடையாளபடுத்தி எதிரிதான் விபத்தை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பில் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 புகார்தாரர் ஆவார். அ.சா.2 , அ.சா.3 அ.சா.4, அ.சா.5, அ.சா.6, அ.சா.7 கேள்விப்பட்ட சாட்சிகள் என்ற அடிப்படையிலும், அ.சா.8 நடத்துனர் ஆவார். அவர் தனது குறுக்கு விசாரணையில் ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும், ஓட்டுநர் சரியான பாதையில் நிதானமாக சென்றார் என்றும், சைக்கிளில் வந்த நபர் குறுக்கே வந்ததால் விபத்து ஏற்பட்டது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.9 மற்றும் அ.சா.10 பார்வை மகஜர் சாட்சி என்ற அடிப்படையிலும் சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.11 தலைமை காவலர் அவர் விபத்தில் இறந்து போனவரின் உடலை உடற்கூறாய்வு வேண்டுகோள் கடிதத்தை மருத்துவரிடம் வழங்கியதைப்பற்றியும், பிரேத விசாரணை முடித்து உடலை உறவினரிடம் ஒப்படைத்து

ஆய்வாளரிடம் ஆய்வறிக்கை சமர்பித்ததை பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டுமே வைத்து எதிரி மீதான குற்றத்தை நிரூப்பிக்கப்பட இயலவில்லை.

17. இந்த வழக்கில் விபத்தை நேரிடையாக பார்த்த கண்ணுற்ற சாட்சியும், எதிரியை அடையாளப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. அது மட்டுமல்லாது எதிரியை யாரும் அடையாளம் காட்டி எதிரிதான் அந்த விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுனராக இருந்தார் என்றும், மேற்படி TN-01-AN-0922 பதிவு எண் கொண்ட அரசு பேருந்தை ஓட்டி வந்த இதன் ஓட்டுநர் குற்ற அறிக்கையில் காணும் எதிரியானவர் அதிகவேமாகவும் அஜாக்கிரதையாகவும் மேற்படி பஸ்ஸை ஓட்டி சைக்கிளில் ரோட்டை கடந்த சுப்பிரமணி மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அதே சம்பவத்தில் சுப்பிரமணி பின்பக்க தலை மற்றும் உள்காயம் ஏற்பட்டு சம்பவயிடத்திலேயே இறப்பு ஏற்பட காரணமாக இருந்ததாக அரசு தரப்பு சாட்சிகள் யாரும் வலியுறுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. புலன் விசாரணை செய்த விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரியின் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டதாக யூகித்துக் கொள்ள இயலவில்லை. எனவே, மேலே கண்ட காரணங்களினால் அரசு தரப்பு வழக்கில் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரியை விடுதலை செய்து தீர்ப்பு அளிப்பது நீதி

நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

18. முடிவாக எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 279, 304(A) IPC –ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. 255(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 02 ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இத்தீர்ப்பு என்னால் பகரப்பட்டது.

S K P DILIP BABU
Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | சசிகலா |
| அ.சா.2 | ராணி |
| அ.சா.3 | பரமேஸ்வரி |
| அ.சா.4 | செந்தில்குமார் |

| | |
|---|---|
| அ.சா.5 | சசிகுமார் |
| அ.சா.6 | தட்சிணாமூர்த்தி |
| அ.சா.7 | ராஜ்குமார் |
| அ.சா.8 | தியாகராஜன் |
| அ.சா.9 | சதீஷ்குமார் |
| அ.சா.10 | விஜயகுமார் |
| அ.சா.11 | சந்தோஷ் |
| அ.சா.12 | மனோகரன் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | பார்வை மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.8 | விபத்து அறிக்கை |
| அ.சா.ஆ.9 | உடற்கூறாய்வு சான்றிதழ் |

எதிரி தரப்பு சாட்சி : இல்லை

எதிரி தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

சான்று பொருட்கள் : இல்லை

**குறிப்பு**

1.வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2.எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

3.விசாரணை காலத்தில் எதிரி காவல் நிலைய பிணையில் இருந்தார்.

S K P DILIP BABU

Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.